## ஹாரிபொட்டர் 4 பிரதி பண்ணப்பட்டதா..?



-ஹாரி பொட்டர்- என்ற கற்பனை சிறுவனின் கதாபாத்திரத்தை அடிப்படையாக வைத்து, நாவல்கள் எழுதி புகழ்பெற்றவர் பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த ஜே.கே.ரவுலிங். இதன்மூலம் கிடைத்த பணத்தால், அவர் இன்று பெரும் கோடீஸ்வரர் ஆகிவிட்டார். இவரது நாவல்கள், திரைப்படங்களாகவும் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், 1987ம் ஆண்டு பிரித்தானிய எழுத்தாளர் அட்ரியன் ஜேக்கப்ஸ் என்பவர் எழுதிய ஒரு நாவலில் உள்ள முக்கிய அம்சங்களை பிரதிபண்ணித்தான், -ஹாரிபொட்டர்- தொடரின் 4-ம் பாகத்தை ரவுலிங் எழுதியதாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அட்ரியன் ஜேக்கப்ஸ் இறந்து விட்ட நிலையில், அவரது குடும்பத்தினர் இலண்டன் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளனர். 500 மில்லியன் ஈரோ நட்டஈடு கேட்க அவர்கள் முடிவு செய்துள்ளனர். ஆனால் இந்த குற்றச்சாட்டை ரவுலிங் மறுத்துள்ளார்.

## 116 கோடியானது கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை



உலகில் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 1.166 பில்லியனாக (116.6 கோடி) அதிகரித்திருப்பதாக வத்திக்கான் அறிவித்துள்ளது. வத்திக்கானில் வெளியிடப்பட்ட கிறிஸ்தவ ஆண்டுவிழா மலரின் புதிய பதிப்பு போப் 16வது பெனடிக்ட் முன்பு சமர்ப்பிக்கப் பட்டது. இதில், 2008ம் ஆண்டு நிலவரப்படி உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. 2008ம் ஆண்டு நிலவரப்படி உலக மக்கள் தொகையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் 17.4 சதவீதம் உள்ளனர். 2007ம் ஆண்டில் கத்தோலிக் கர்களின் சதவீதம் 17.33 என இருந்தது. எனினும் உலகளவில் பாதிரி மார்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதும் தெரியவந் துள்ளது. கடந்த 2000ம் ஆண்டு முதல் பாதிரிமார்களின் எண்ணிக்கையில் எட்டு சதவீத சரிவு காணப்படுகிறது. ஐரோப்பாவில் மட்டும் 17.6 சதவீதமும், அமெரிக்காவில் 12.9 சதவீதமும் சரிவு ஏற்பட்டுள்ளது. ஆனால், ஆபிரிக்கா (3.6 சதவீதம்), ஆசியா (4.4 சதவீதம்) உள்ளிட்ட பகுதிகளில் கிறிஸ்தவ பாதிரியார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாம்.

## உலகில் அழகானவர்கள் யார்?



உலகில் மிகுந்த கவர்ச்சியானவர்கள் வசிக்கும் நாடுகளின் பட்டியலை பிரித்தானிய இணையதளம் ஒன்று தயாரித்தது. 5 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட வர்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் அமெரிக் காவுக்கு முதலிடம் கிடைத்தது. ஏஞ்சலீனா ஜோலி, ஜோர்ஜ் குளூனி ஆகியோரின் அழகு கவர்ந்து இழுப்பதாக கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரேசில் நாட்டினர் 2வது இடத்தை பிடித்தனர். ஸ்பெயின் 3வது இடம் பெற்றது. அவுஸ்திரேலியர்கள் 4வது இடத் தையும், இத்தாலியர்கள் 5வது இடத்தையும், சுவீடன் நாட்டினர் 6வது இடத்தையும், பிரித்தானியர்கள் 7வது இடத்தையும், இந்தியர்கள் 8வது இடத்தையும் பிடித் தனர்.

திரை உலகத்தை சேர்ந்த ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர், கத்ரீனா கைப், சல்மான் கான் ஆகியோரின் அழகு கவர்ச்சியானதெனவும் இந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பிரான்ஸ் நாட்டினர் 9வது இடத்தையும், கனடா நாட்டினர் 10வது இடத்தை பிடித்தனர். மொத்தம் 20 நாடுகளின் பட்டியலில் போர்த்துக்கல், ஜப்பான், நெதர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளும் இடம் பிடித்துள்ளன. ஆபிரிக்க நாட்டை இவர்கள் கவனத்தில் எடுக்கவில்லைப்போலும், அல்லது வெள் ளைதான் அழகென்று எண்ணிவிட்டார்கள் போலும்.

## மின்னியல் குப்பைகளால் சீனாவும், இந்தியாவும் பாதிப்பு



உலகில் மின்னியல்ச் சாதனங்களின் (எலக்ரோனிக், எலக்ற்றிகல்) குப்பைகளால் அதனை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடுகளான சீனாவும் இந்தியாவும் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நாளுக்கு நாள் மலைபோல குவிந்து வரும் இந்தக் குப்பைகளால் இந்தியா, சீனா உட்பட வளரும் நாடுகளுக்கு ஆபத்து அதிகரிப்பதாக ஐ.நா. சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு எச்சரித்துள்ளது. இதுபற்றி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இந்தியா, சீனா, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளில் தொலைக்காட்சி, கணினி, செல்பேசி உட்பட மின்னியல் பொருட்களின் விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் அந்நாடுகளில் இந்த பொருட்கள் விற்பனை 10 சதவீதம் உயரும். விற்பனை உயர்ந்து வருவதற்கு ஏற்ப, பழுதடைந்த கைவிடப்பட்ட மின்னியல் குப்பைகளின் அளவும் அதிகரித்து வருகிறது. அவற்றை கையாள்வதற்கு வளரும் நாடுகளில் சரியான நடைமுறைகள் இல்லை. இந்த குப்பைகளை முறையாக சேகரித்து, மறுசுழற்சி செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டியது அவசியம். தவறினால் மலைபோல குவிந்து வரும் மின்னியல் குப்பைகளால் சுற்றுச்சூழல் பாதிப்புடன் மக்களின் உடல்நலனுக்கு தீங்கு ஏற்படும் அபாயம் உள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## உணர்ச்சிகரமான விளம்பரங்களுக்கு சீனாவில் தடை

பாலியல் உணர்வைத் தூண்டக் கூடிய வர்த்தக விளம்பரங்களை உடனடியாக தடை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஒளிபரப்பு உரிமை இரத்து செய்யப்படும் என தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து, சீன அரசின் வானொலி, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிர்வாகத் துறை தனது இணையதளத்தில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன் விவரம், பாலியல் உணர்வைத் தூண்டக் கூடிய மருந்துகள், மருத்துவ கருவிகள் மற்றும் இதர உடல்நல ஆலோசனைகளை வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளிபரப்பக் கூடாது. விதிகளை மீறி இத்தகைய விளம்பரங்களை ஒலி, ஒளிபரப்புவது தெரியவந்தால், அந்த நிறுவனத்தின் அனைத்து வர்த்தக விளம்பரங் களுக்கும் தற்காலிக தடை விதிக்கப்படும். தொடர்ந்து விதிகளை மீறினால் நிரந்தரமாக தடை விதிக்கப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது. மேலும் தொலைக்காட்சி வர்த்தக நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு முன்பாக அது குறித்து தணிக்கை செய்யுமாறும், கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்குமாறும் சம்பந்தப்பட்ட ஒளிபரப்பு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

